வுடன், புதிதாக அறிவிக்கப்பட்டு இருக்கிற இடங்களுக்கும் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 314. டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

314—

வாய்க்கால்களின் கரைகளைச்சீர்படுத்த விவசாயிகளுக்கு மானியம்.

* 2464 டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மைப் பொறியியல் துறையின் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வாய்க்கால்களில் சுலபமாக தண்ணீர் செல்வதற்கு கரைகள் கட்ட விவசாயிகளுக்கு நூறு சதவிகித மானியம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் உள்ள விதிமுறைகளின்படி 100 சதவீதம் மானியம் வழங்க இயலாது.

டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்ற கூற்றுக்கு இணங்க, வருங்காலத்தில் உலகப் பொருளாதார அரங்கில் உணவு உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளை வல்லரசு நாடுகளே தங்கள் உணவுத் தேவைக்காகச் சார்ந்து இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகும் நிலையில், நில வளம் உள்ள நம் தமிழ்த் திருநாட்டின் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க நீர்வளத்தைப் பெருக்கும் இப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வாய்க்கால்கள், கரைகள் கட்ட விவசாயிகளுக்கு 100 சதவீதம் அளிக்க வேண்டுமென்ற என் கோரிக்கையை நமது அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள விதிமுறைகளின்படியும், அரசிடம் உள்ள நிதியைப் பொருத்தும் 50 சதவீத மானியம் தான் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிதி நிலைமை சீரான வுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நல்லதொரு முடிவு எடுப்பார்கள்.